
சைவ நற்சிந்தனை

# எமது குருநாதர் சிவயோக சுவாமிகள்




ஆசிரியர்: நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# "ஆத்மஜோதி"

(மாதாந்த சமய சஞ்சிகை)

வருட சந்தா : 3/- ஆயுட் சந்தா : 100/-

பதிப்பகம் :

**ஆத்மஜோதி நிலையம்**

நாவலப்பிட்டி.

திரு. க. இராமச்சந்திரன்
கௌரவ ஆசிரியர்

திரு. நா. முத்தையா
பதிப்பாசிரியர்

---

திருவருட் கடாட்சம், பல மகான்களுடைய ஆசி மூலம் சுவறிய ஒப்பற்ற பாக்கியத்தால், ஆசிரியர்கள் இப் பத்திரிகையை 18 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடாத்தி வருகிறார்கள். திரு. நா. முத்தையா ஆசிரியர் அவர்கள் தம்முடைய வாழ்க்கையையும், தேட்டத்தையும் சிவப் பணிக்கும் சீவப்பணிக்கும் தியாகம் செய்துள்ளதால், மகான்களின் அருளாசி எமக்கும் சுவறுவதற்குரிய சீரிய முறையில் இப்பத்திரிகை நடந்துவருகின்றது. "ஆத்ம ஜோதி" இலங்கையில் மாத்திரமல்ல, வெளிநாடுகளி லும் வாசிக்கப்படுகின்றது.

பத்திரிகையின் புனிதத்துவம் கெட்டுவிடக்கூடாது என்ற முக்கிய கொள்கையால், இதுகாறும் விளம்பரங் கள் சேர்க்கப்படவில்லை. ஆகையால் மிகுந்த பொருட் கஷ்டத்துடனேயே இவ்வரிய தொண்டு நடைபெறுகிறது; பத்திரிகையின் வளர்ச்சிக்கு சமயப் பற்றுடையோர் ஆத ரவு வேண்டும்.

தானங்களில் ஒப்பற்றது ஞானதானம். இப்பத்திரி கைத் தொண்டால் பெருகும் ஞானதானப் புண்ணியப் பயனில் தாங்களும் பங்குகொள்ளுவதற்கு சந்தாதாரரா கச் சேர்ந்தும்—சேர்த்தும் பேருதவி புரிக. சைவ சமூகத் தினரை நல்வழிப்படுத்தி, வழிபாடு செய்யவைக்கும் சிவ தொண்டுக்குதவி, பெரும் புண்ணியப்பயனைப் பெறுக. சம யப் பற்றுடையோர் தம் கடமையாக இப்பத்திரிகையை வளர்க்கவேண்டுமென மெய்கண்டான் ஸ்தாபனத்தார் பிரார்த்திக்கின்றார்கள்.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்



# சைவ நற்சிந்தனை

ஆசிரியர்:

**நா. முத்தையா**

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.

பதிப்பகம்:

மெய்கண்டான் அச்சியந்திரசாலை லிமிட்டெட்

161, செட்டியார் தெரு, கொழும்பு.

**22-3-1967**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

"ஆத்மஜோதி" ஆசிரியர்: ஸ்ரீ நா. முத்தையா அவர்கள் இலங்கையில், விசேஷமாக மலைநாட்டில், செய்து வரும் சைவசமயப் பணி பெரிதும் போற்றத் தக்கதொன்றாகும். இன்று, அவர்களுடைய பணியை யும் பணியின் பயனையும், சைவ நன்மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் பல சமய-சமூகப் பணிகளை ஆற்றியும், கலகலக்காமல் அடக்கமாக வாழும் நற்குண சீலர். நல்லார் என்ற பதத்துக்கு இலக்கணமாக வாழும் நல்லார் அவர்.

ஸ்ரீ யோக சுவாமிகள் வாழ்ந்து காட்டிய "சிவ தொண்டன்" நெறியைப் பின்பற்றும் திரு. முத் தையா அவர்கள், ஸ்ரீ சுவாமிகளுடைய நற்சிந் தனைப் பாடல்களைப்பற்றி இலங்கை வானொலியில் பேசிய 6 விஷயங்களை இக்குறுஞ்சுவடி கொண்டுள்ளது.

எமது புண்ணியப்பயனாகிய சிவஞானச் செல் வர், ஸ்ரீ யோக சுவாமிகளுடைய பொன்னார் திரு வடிக்கு இச்சிறுமலரைச் சூட்டி, அவர்கள் மகா சமாதியெய்திய இத்திருநாளில், போற்றி வழிபடுகின்றனம்.

**நா. இரத்தினசபாபதி**

"மெய்கண்டான்"
கொழும்பு
22-3-67.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வழிபாடு

'குருவில்லா வித்தை பாழ்' என்று சொல்லுவார்கள். குரு என்றால் அஞ்ஞானத்தைப் போக்குபவர் என்பது பொருள். எல்லாத் தொழிலும் குருமுகமாகவே நடை பெற்று வருகின்றன. ஏகலைவன் என்ற வேடனுக்குத் துரோணாச்சாரியார் வில்வித்தை கற்பிக்க மறுத்த போதிலும் அவன் அவரையே குருவாகப் பாவனைசெய்து வில்வித்தையில் சித்தி அடைந்தான்.

ஜனகாதி முனிவர்கள் நால்வரும் நான்கு வேதம் 68 ஆகமங்கள் முதலான எல்லாச் சாஸ்திரங்களும் கற்று உணர்ந்தவர்கள். இத்தனை கற்றும், நாம் என்ன கற்றோம்? என்றொரு ஏக்கம் அவர்களிடத்திலே உதித்தது. இச்சந்தேகத்தை நீக்குவதற்குத் தம்மிலுங் கற்றோரைத் தேடினார்கள். ஈற்றில் சிவபெருமானிடமே சென்று சேர்ந்தார்கள். சிவபிரான் இவர்கள் வந்த நோக்கத்தைச் சொல்லாமலே புரிந்து கொண்டார். கல்லால விருட்சத்தின் கீழ் தெற்கு நோக்கிய வண்ணம் சின்முத்திரையோடு சிவபிரான் காட்சி கொடுத்தார். முனிவர்கள் நால்வரும் அவரை நோக்கியபடியே அவரைப்போலவே உட்கார்ந்தனர். மாணவர்கள் மிக விவேகிகளாதலால், சிவபிரான் சொல்லாமல் சொல்லியதை உணர்ந்து சந்தேகத்தைப் போக்கிக் கொண்டார்கள். நாம் வடக்கு நோக்கி வணங்குகின்றோம். அங்ஙனம் வணங்கும் போது தக்ஷிணாமூர்த்தியாம் இறைவனே பக்குவ ஆன்மாக்களுக்கு குருவாக இருந்து உணர்த்துகிறார் எனப் பிரார்த்தனை செய்கின்றோம்.

சைவசமயத்தவர்கள் எல்லோருக்கும், பரமசிவனே பரமாசாரியாராக இருக்கின்றார். எமது குருபரம்பரை அவரிலிருந்தே ஆரம்பித்துள்ளது. ஆனபடியாற்றான் தமிழகத்திலுள்ள ஆதீனகர்த்தர்கள் தமது பெயரின் முன் திருக்கைலாயஞான பரம்பரை என்று எழுதுவதைப் பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகப் பெருமானுக்குப் பரமசிவனே பரமாசாரியராக குருந்தமர நிழலில் திருவடிதீட்சை செய்தருளினுர். திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பாலூட்டி நயனதீட்சை செய்தருளினுர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சித்தமடத்தில் படுத்திருந்தபோது திருப்பாதத்தை அவர்தலையில் வைத்து திருவடிதீட்சை செய்தருளினுர்.

இதனுல் குருவே இறைவன்; இறைவனே குரு என்னும் உண்மை புலப்படுகின்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமகம்சருக்கு காளிதேவியின் தரிசனம் கிடைத்தும், அவருடைய சாதனை பூரணமாவதற்கு தோதாபுரி என்னும் குருவினிடம் உபதேசம் பெறுமாறு தேவியே உத்தரவு கொடுத்தார்.

அவதார புருஷராகிய ஸ்ரீராமனுக்கும் வசிட்டமகரிஷி உபதேசம் செய்யவேண்டியதாயிற்று. மும்மூர்த்திகளும் தங்கள் ரூபத்தையும் சக்தியையும் வரமாகக் கொடுத்த தத்தாத்திரேயருக்கு, நாய், எறும்பு, புரு, ஆறு முதலிய 28 வகையான இயற்கைப் பொருட்கள் குருவாக அமைந்தன.

புத்தர், ரமணர் போன்ற ஞானிகளுக்கு குரு இல்லையாயினும், பூர்வஜன்மங்களில் அவர்களுக்கு குரு உபதேசமாகி, அவர்களுடைய தவத்தின் முடிவு நிலையில் அவதரித்தனர். ஆகையால் பொதுநியதிக்கு அவர்களுடைய அவதாரம் விதிவிலக்காகும்.

எவருடைய சந்நிதியில், ஒருவருக்கு ஆத்மசாந்தமும் கருவிகரணங்களின் அமைதியும், மயிர்க் கூச்செறிவும், உரை தடுமாறலும், ஆனந்தக் கண்ணீரும் உண்டாகின்றனவோ அவரே ஞானகுருவாம். மற்றையோரெல்லாரும் நல்வழி காட்டும் ஆசாரியார்களாவர். குருவைச் சரணடைந்து சாதனை செய்யும் பேறு ஒப்பற்றது. நேர்முகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசம் செய்யாவிடினும், ஸ்ரீ யோகசுவாமிகள் தம்மை வந்தடைந்தோருக்கு அறக் கருணை காட்டியும், மறக் கருணை காட்டியும், குருவாக அமைந்ததைப் பார்க்கிறோம் செல்லப்பா சுவாமிகள் யோகசுவாமிகளின் குருநாதரானவர். குருநாதர் அருளிய உபதேசப்பேற்றையும் அதன் இன்பத்தையும் ''எங்கள் குருநாதர்'' என்ற திருப்பாடலில் நலங்கனிய விளங்க வைக்கின்றார் சுவாமிகள்.

என்னை எனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னைபிதாக் குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மை தீமையறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்.

வணக்கம். சிவாயநம.

★

பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்றவன், இப்பிறவியிலேயே ஈசுவரனை அறிய முயலாது போனால் வீணில் பிறந்தவனேயாவான்.

—ஸ்ரீ இராமக்கிருஷ்ணர்.

★

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிகளெல்லாம்
பெறுதற்கரிய பேறிழந்தாரே.

—திருமூலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பு

எந்த நற் கருமத்தையும் யாம் ஆரம்பிக்கு முன்னர் தீயசக்திகளின் இடையூறின்றி, எடுத்த கருமம் இனிது நிறைவேறுவதற்குப் பிள்ளையார் வணக்கத்தை தவருது யாம் செய்து வருவது இந்துமத பாரம்பரிய வழக்கம். பாவலர்களும், பிள்ளையாருக்குக் காப்புப் பாடல் பாடிய பின்னர்தான் தம் நூலைப்பாடுவார்கள். திருவருளே முன்னின்று வாழ்க்கை நல்வினைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற உண்மையை எளிய நடையில் ஸ்ரீ யோக சுவாமிகள்.

> " அத்துவிதப் பொருள் காப்பாம் – எனக்கு அடியார்கள்
> என்றென்றுங் காப்பாம்
> சித்தரும் தேவருங் காப்பாம் – எந்தன் சித்தத்திலங்குந்
> திருவருள் காப்பாம் "

என்று அருளியுள்ளார்கள். வீட்டிலே பிள்ளைகளுக்குப் பெற்ருர் காப்பு. மனைவிக்குக் கணவன் காப்பு-நாட்டிலே கிராமத்திற்குத் தலைவனும், தேசத்திற்கு அரசனும், மனித சமுதாய நல் வாழ்வுக்கு மதஸ்தாபனங்களும் காப்பாகும் - உலகத்திலே உயிர்கள் எல்லாவற்றுக்கும் தருமமே என்றும் அழியாத பாதுகாப்பு. இம்மைக்கும் மறுமைக்கும் இதுவே வழித்துணை. திருவருள் மக்களுக்குச் சுவற வேண்டுமாளுல், அவர்கள் வாழ்விலே தருமம் இருந்தாற்தான் சுவறும். இப்பேருண்மையை விளக்கவே, சிவபெருமான் சனுதன தருமதேவதையாகிய வெள்ளை இடபத்தில் எழுந்தருளிச் சர்வ உலகங்களுக்கும் கருணை பாலிப்பதாகச் சைவ சமயத்தவர் கருதி வழிபடுகின்றனர். மனிதனுடைய தனிவாழ்விலும் சமுதாய வாழ்விலும், தருமம் இல்லா விட்டால் அங்கு துன்பமும் அழிவுமே விளையும். இத்தரும பரிபாலன அடிப்படையில், எம்முடைய வாழ்வை நோக்குமிடத்து, எம்முடைய புண்ணியமே எமக்குக் காப்பு. பாவமே எமக்குப் பகை. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை அறிவுறுத்தவே 'நன்றும் தீதும் பிறர்தர வாரா' என்றார் புலவர். இதை ஒருவாறு விளங்கினல், நல்வாழ்வுக்குத் துணையாகும்.புண்ணியப்பயன் உள்ளவனுடைய உள்ளத்தில் குடிகொண்ட தருமம், இனிமை, நல்லியல்பு காரணமாய், அவனிடம் எல்லோரையுமே கவரும் அன்புச்சக்தியுண்டு. இதனல் மக்களுடைய அநுதாபத்தையும் அன்பையும், ஆசியையும் பெற்று இன்புறுகின்றான். பாவவினையாளன் உள்ளத்தில் குடிகொண்ட தீயசுபாவங் காரணமாய் அவன் காரணமின்றியே பகைமையைத் தேடிக்கொள்ளுகின்றான். இதனல் அவனைக்கண்ட மாத்திரத்தே மக்களுக்கு வெறுப்பும் அநுதாபமின்மையும் உண்டாகி மக்களால் புறக்கணிக்கப்படுகின்றான். ஆகையால் எம்முடைய புண்ணியப்பயனே எமக்குப் பிறவிகள் தோறும் தொடர்ந்து காப்பாகின்றது.

இந்த அழியாத காப்பை யாம் வாழ்க்கையில் பெறுவதற்கு புண்ணியம் ஈட்டவேண்டும். புண்ணியம் சீவத்தொண்டினலும், சிவ தொண்டினலுந்தான் விளைகின்றது எனவும், இதுவே உய்யும்வழி எனவும், திருத்தொண்டர்கள் தவ வாழ்வு உணர்த்துகின்றது சிவதொண்டர்களுக்கு விசேட காப்பணியாக பாடல்களும் உருத்திராக்கமும் ஸ்ரீபஞ்சாட்சர மந்திரமும் திருநீறும் விதிக்கப்பட்டுள்ளன. மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது எனப் பொருள் படும். தும்மல், இருமல் தொடக்கம், பிறவிப் பிணி வரையுள்ள துன்பத்தினின்று காப்பாகிக் கரையேற்றுவது ஸ்ரீ பஞ்சாட்சரம் என்று சிவனடியார்கள் அனுபவத்திற் கண்டு அருளினர்கள். 'மந்திர மாவது நீறு' என்று பஞ்சாட்சரத்தின் மகிமையை திருநீறும் உடையதாகத் திருநீற்றுப் பதிகத்தில் திருஞானசம்பந்தப் பிரான் எமக்கு உபதேசித் தருளினர்கள். இவ்வண்ணமே அடியார்கள் திருநாமமும், அவர்களுடைய திருவடித்தியானமும், குரு வழிபாடும் ஒப்பில்லாத காப்பாகும். இவற்றில் ஏதாவது ஒரு அருட் காப்பையாவது யாம் வாழ்நாள் முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டாற்தான், பலகோடி விக்கினங்களிலிருந்து பாதுகாப்பாக வாழலாம்.

இவையனைத்தும் யாம் மேற்கொள்ளும் சிறந்த சாதன மார்க்கக் காப்புகள். ஆனால், இறைவனுடைய திருவருள் எம்மை ஆட்கொண்டபோதுதான் இறவாமல் பிறவாமல், என்றென்றும் எமையாளும் அழியாத காப்பைப் பெற்ற வர்களாவோம் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். இப்பேரின்ப நிலையிலேதான் உலகத்தில் 'நாம் ஆர்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்'', என்ற திருநாவுக் கரசுசுவாமிகளுடைய திருவருட்தீரத்தைப் பெறலாகும். அடியார்கள் உள்ளத்தில் இறைவன் குடியாய் இருக்கின்ற படியால் உலகத்தில் உள்ள எல்லாம் நன்மையே செய்யும் என்பதை ஸ்ரீ யோக சுவாமிகள் ஐயமற விளக்குகின்றார் கள்.

சந்திர சூரியர் காப்பாம்— எங்கும் தங்கும் உயிர்கள்
அனைத்துமென் காப்பாம்.
மந்திர தந்திரங் காப்பாம்— நான்குமறைகள் சிவாகமம்
மாநிலம் காப்பாம்.

இந்த உண்மையைக்கோளறு பதிகத்தில் சத்திய வாக்காக ''ஆணை நமதே'' என்று சம்பந்தப் பிரான் அருளித் திருவருட்காப்பை மேற் கொள்ளும்படி அறிவுறுத்துகின்றார்.

திருவருளைச் சுரந்து சர்வ புவன கோடிகளையும் காத்துக் கருணைபாலிக்கும் ஒன்றே திருவடி எல்லாவற்றுக்கும் என்றென்றும் காப்பாகும். ''போற்றி யாம் உய்ய ஆட் கொண்டு அருளும் பொன் மலர்கள்.''

வணக்கம் சிவாயநம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயன்பு நெறி

"நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கிறோம்
நாம் அவருடைய தாய்
நமக்கும் அவருக்கும் ஒருகுறைவுமில்லை.
நம்மை அவர் பிரிய முடியாது. முழுதும் உண்மை"

இவ்வாசகங்கள் யாழ்ப்பாணம் ஸ்ரீ யோக சுவாமிகள் அருளியவையாகும். கடவுளே சகல உலகங்களையும் தாயுமானவராய்க் காக்கும்போது, "நாம் அவருடைய தாய்" என்பது விசித்திரமாகத் தோன்றலாம். அப்படியல்ல, சைவநற் சிந்தனையிலே இவ்வாசகத்தின் பொருள், பக்தியோகமார்க்கத்தின் உச்சப்படியில் இனிது அமைந்துள்ளது.

எமது உள்ளத்திலே கடவுளைத் தவிர வேறு எல்லாவற்றுக்கும் இடங்கொடுத்துள்ளோம். தூரத்திலே விரட்டப்படவேண்டிய பலதரப்பட்ட ஆசை ஆணவ அகங்காரப் பேய்களெல்லாம், உள்ளக் கோயிலிலே குடிகொண்டுள்ளன; கோவில் பாழடைந்து விட்டது. அதனால் யாம், 'துன்பமே எந்நாளும் இன்பமில்லை' என்று பாடலையும் புரட்டிப் படித்தாற்போல் அல்லலுறுகின்றோம். இவ்வண்ணம் துன்பப்படவேண்டாம். மக்களே வாருங்கள்! வழிகாட்டுகிறேன். என்கிறார் கருணைவள்ளலாகிய ஸ்ரீ யோக சுவாமிகள்.

கடவுளாகிய கற்பகதருவை உள்ளத்தில் வளர்க்க வேண்டும். ஜீவகாருண்ய உரமிட்டு, தினமும் அன்பு நீர் பாய்ச்சினால், அது வளர்ந்து எமக்கு என்றும் பொன்னும் மெய்ப்பொருளும் தந்து, மண்ணில் நல்லவண்ணம் வாழ வைக்கும், திருநாவுக்கரசு நாயனார்:-

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாதொருபோது மறந்தறியேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று திருவாய் மலர்ந்தருளியபடி, இறைவனுக்கு மாத்திரமே மனதில் தனி இடம் வைத்து, அவனை மறவாது அருட்சிந்தையில் ஊறிநிற்க வேண்டும். உயிரினம் கண்ட ஒப்பற்ற அன்பு தாயன்பாகும். இத்தகைய அன்பை இறைவன்பாற் சொரியும்போது இறைவன் அடியார்க்கு எளியவனுகி அவர்களுடைய பாவனைக்கு ஏற்றவாறு, குழந்தையாயும் விடுக்கின்ருன். பாண்டியராஜனுக்கும், பர்வதராஜனுக்கும், பார்வதி புத்திரியானுள். யசோதைக்குக் கண்ணன், குழந்தையானுன். கற்பனைக்கும் எட்டாத இறைவன், மானிடவடிவில் யாம் கொஞ்சிக்குலவும் நிலைக்கு இறங்கி, அன்புக்கு மிகமிக எளிமையாகும் அற்புதக் கருணையைக் காண்கின்ரேமல்லவா!—இவைன் திருவடிக்கீழ் சதாபூஜையாய், அனந்த கோடி நறுமலர்கள் சோபையுடன் காலங்கடந்து நின்று ஒளிர்கின்றன. அங்கே தென்னுட்டிலிருந்து தெரிந்து எடுத்த 63 பேரின்ப மலர்களாற் தொடுத்த மாலையின் பொலிவைக் காட்டியவர் சுந்தரமூர்த்திநாயனுர். திருவடிக்குச் சாத்தப்பட்ட அம்மாலையின் ஒரு பூ இமயவல்லிக்கும் அதிசயிக்கத்தக்கதாக இருந்தது ''அது என்ன பூ'' என்று கைலாயநாயகி நாயகரை ஆவலுடன் வினுவுகின்ருர். இக் காட்சியும் கைலாயநாயகன் அருளியவிடையும் சேக்கிழார் பெருமானின் பாடலில் பக்திப் பேரழகு பொங்க விளங்குகின்றது.

'வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே, மற்றிப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள் என்று பின்னை
அருகு வந்தணைய நோக்கி அம்மையே என்னுஞ் செம்மை
ஒருமொழி உலக மெல்லாம் உய்யவே அருளிச் செய்தார்.''

''நம்மைப் பேணும் அம்மைகாண்'' என்று சிவபிரான் உத்தரம் அருளியது: இறவாத இன்ப அன்பினுல், தாய் போல் ஊட்டியும், போற்றியும், புகழ்ந்தும், இறைவனைத் தன் உள்ளக் கமலத்திலே பேணி இடையருத பக்தியை வளர்த்த காரைக்கால் அம்மையார் என அமைகின்றது. மேலும் ஒரு காட்சியை சேக்கிழார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கின்றார். தாயைக் காணாத குழந்தை தவித்துக் கொண்டு காத்திருக்கும். கண்டவுடன் ''அம்மா'' எனப் பரவசங் கொண்டு ஆனந்திக்கும். அதுபோலல்லவோ, அடியார்க்கு எளியராய்ப் புறம்புறந் திரியும் பரமன், காரைக்கால் அம்மையைக் கைலையிற் கண்டதும் அம்மையாருடைய பரம பக்தியை ஏற்றருளி, ஆனந்தங் கொண்டவராகி ''அம்மையே'' என்று குழந்தை போலக் கூவி அழைத்து ஆர்ப்பரிக்கும் காட்சி கண்முன் நிற்கின்றதைக் காண்கின்றோம்!

இத்தகைய அன்பு கரை கடந்து நிற்கும் நிலையிற் தான் ''அன்பே சிவம்'' என்பது அமையும். தாயின் அன்பில் பிள்ளைகள் கட்டுப்படுவது போல், இறைவனும் ''பக்தி வலையிற் படுவோன் காண்க'', என்றருளினார் மணிவாசகப் பெருமான். பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் இத்தாயன்பு நெறியில் உதித்த பக்தி இலக்கியங்களாகும்.

நான்குவித பக்தியோக மார்க்கமும் திருவடிக்கு அணி செய்வதாகுமானால், இவை யெல்லாவற்றையுங் கடந்த தாயன்பு நெறி, திருவடிக்கு முடிசூடிய சிறப்புடையது, என்பதை உணர்வோமாக. ''வாழ்க சீரடியரெல்லாம்''.

வணக்கம். சிவாயநம.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

துன்பத்திற்குக் காரணம் ஆசை. ஆசையற்ற இடத்து வருவது நீங்காத பேரின்பம்.

ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பம்
ஆசை விடவிட ஆனந்தமாமே.

ஆசைகளை அநுபவித்துத் தீர்த்த பின்புதான் ஆசையை விடமுடியும் என்று இச்சைகள் வசப்பட்டவர்கள் வாதிப்பார்கள். இது அழியும் புத்தி. எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியா அணைக்கவேண்டும்?

வாழ்க்கைக்கு வரம்பு போன்றது ஒழுக்கம். ஆசை வெள்ளம் நாளுக்கு நாள் பெருகுமேயானுல் எல்லா வரம்புகளையுமே உடைத்து, மனம் போன போக்கிலே போய், மிருகநிலைக்கு மனிதனை இறக்கி, இரும்புக் காப்புடன், சிறைச்சாலைக்கோ, மனநோய் வைத்திய சாலைக்கோ செல்லவைக்கும். மேலும், ஆசாபாசங்களால் மனம் கருணையற்ற கல்லுப் போலாகி பிறவித் துன்பக்கடலில் ஆத்மாவை ஆழ்த்திவிடும். ''நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக'' என்ருர், அருணகிரிநாதர். இளகிய தெய்வீக உள்ளத்தினரின் அரிய தியாகங்களாலே தான் உலகமக்கள் ஆறுதல் பெறுகின்றனர். கிருஷ்ணபகவான், புத்தர், யேசுநாதர், அப்பர், சங்கரர், காந்தி, போன்ற மகான்களாலும், டாக்டர் கியூறி அம்மையார், டாக்டர் பாஸ்ரர் போன்ற தியாகசீலர்களாலுந்தான் உலகம் இத்தனை சாந்தியுடன் வாழுகிறது. இல்லாவிடின், காட்டு விலங்குகளைப்போல் நாட்டிலும் நித்திய கலகமும், கலக்கமுமாயும் காணப்படும். ''பண்டைக் காலத்தில் சாவுதான் மனிதனுக்குப் பயங்கரமானது. ஆனுல் இன்றைய மனிதனுக்கு வாழ்வே பயங்கரமாகிவிட்டது,'' என்ருர் ஒரு பெரியார். ''பேராசை பெருந்தரித்திரம்'' என்ற முதுமொழிக்கு இன்றைய உலகம் இலக்கியமாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைபட்ட மனம் பலதரப்பட்டது. மற்றவன் சொத்து எல்லாம் தனக்கு வரவேண்டும் என்பவன், மிருக நிலையிலுள்ள அவாமனம் உள்ளவனும்—தானுண்டு, தன்பாடுண்டு, தன் சொத்தைப் பிறருக்கும் கொடான், பிறர் சொத்தைத் தானுந் தொடான். இவன் மனித நிலையிலுள்ள பற்று மனமுடையவன்—தன்னைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரம் கொடுத்து வாழுபவன் தேவ நிலையிலுள்ள அன்பு மனம் உடையவன்—ஆனால் உலகத்திலே மன்னுயிர் எல்லாம் தன்னுயிர் போலக் கருதுகின்றவர்கள் பேரன்பு நிறைந்த தெய்வீக நிலையிலுள்ள அருள் பழுத்த மனம் உடையவர்களாவர்—பற்றற்ற மகான்களின் சேவையே உலகத்திற்கு உயிரளிக்கும் உத்தம சேவை யென்று மனித குலம் போற்றுகின்றது.

பல்வகைச் செல்வம் இருந்தும், வாழ்க்கைக்கு வேண்டிய போகங்கள் இருந்தும், அதிகார அந்தஸ்துகள் இருந்தும், வாழ்க்கையில் மனச்சாந்தியில்லாதுவிடின், இத்தனை வசதி வளங்களும் இல்லாததற்குச் சமமாகும். ஆசை பெருகும் இடத்தில் மனச்சாந்தி தங்காது. ஆசையென்ற கொடிய பிணியே பிறப்பு இறப்புக்குக் காரணம். இக்கொடிய பிணிக்கு வைத்தீஸ்வரனாகிய இறைவனிடந்தான் மருந்துண்டு. அந்த மருந்தைச் சைவசமயத்து மகான்கள் உட்கொண்டு, அதையே எமக்கும் காட்டியருளினார்கள். அது அக்குமணியணிந்து, பஞ்சாட்சர மந்திரம் ஜெபித்து உட்கொள்ளும் திருநீறென்னும் ஔஷதமாகும். இம்மருந்துக்கும் அநுமானம் உண்டு. ஜீவகாருண்யசேவையும் சிவதருமசேவையுமாகிய, சிவதொண்டுதான் அநுமானம். நேயர்களே, ஆசையை ஒழிப்பது அற்பமனோசக்தியுடைய மனிதருக்கு முடியாத காரியம். ஆகவே, ஆசையின் வேகத்தை முழுதும் சிவதொண்டிலும் சிவசிந்தையிலும் செலுத்தினால் வாழ்க்கை வெற்றியாகும். இதுவே மிகச் சுலபமான வழி. மகான்கள் காட்டிய வழி. புல் பூடு, சந்திர சூரியர், ரிஷிகள், தேவர்கள் எல்லோரும் சிவதொண்டு செய்துதான் ஈடேறுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுர்கள். ஆதலாற்தான் யோகசுவாமிகளும் ''தொண்டர் நாங்களே—சிவதொண்டர் நாங்களே'' எனப் பெருமையுடன் சாற்றுகின்ருர். ராஜரிஷி ஜனகமகராஜனைப் போல போக போக்கியங்களுடன் வாழ்ந்தாலும், ''காதற்ற, ஊசியும் வராது நின் கடைவழிக்கே'' என்ற திடசித்தத்துடன் வாழவேண்டும். அப்படி வாழும்போது, உலகப் பொருட்கள், போகங்கள் துன்பத்திற்குக் காரணமானவை என்று உணருவோம்; உணரப் பெற்ருல், உலகிலே வேண்டியது, ஒன்றும் வேண்டாமையென்ற திடமுண்டாகி, பூரண திருப்தியும் சாந்தியும் ஆனந்தமும் ததும்பும். இதுவே, வாழ்க்கையின் பயன்—தவத்தின் பேறு—சச்சிதானந்தப் பெருவாழ்வு. இத்தனை சிந்தனைகளையும் உள்ளடக்கியே ஸ்ரீ யோகசுவாமிகள்

வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே
மிக்க அன்பருள் வாழ்ந்திட வேண்டுமே
மாண்டு மாண்டு பிறந்திட நேரினும், மாதவ!
மற்றொரு பற்றின்றி
ஊன்று பாதத் துறங்கிடவேண்டுமே, ஓம் சிவாயநம
வென வேண்டுமே
ஈண்டெனக்கொரு சொல்லால் உணர்த்திய என்குருபர
புங்கவ சிங்கமே.

என்று அருளியுள்ளார்கள்.

★

**உனது காம இச்சைகளை நன்ருய் அடக்கி ஆளப் பிரயத்தனப்படு. அதில் ஜயம் அடைந்தால், சரீரத்தில் ஒருவித மாறுபாடு உண்டாகும். அதாவது இந்திரிய சக்திகளை ஆத்மவிஷயத்தில் பிரவர்த்திப்பிக்கும் ''மேதை'' என்ற நாடி வளருகிறது. இந்த மேதை நாடி வளர்ச்சியடைந்த பின்பே ஆத்ம விஷயமான உயர்ந்த ஞானம் உண்டாகிறது.**

**—ஸ்ரீ இராமக்கிருஷ்ணர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன்

தொண்டர் நாங்களே—சிவ
தொண்டர் நாங்களே

"சிவ தொண்டு செய்வார் தெய்வமே போல்வார்", என்பது ஸ்ரீ யோக சுவாமிகளுடைய அருள்வாக்காகும். பலன் கருதிச் செய்வது தொண்டாகமாட்டாது. இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்து, பணி செய்து கிடப்பதே தொண்டு. சிவனை முன்வைத்துச் செய்வதெல்லாம் சிவதொண்டாகும்.

தொண்டனுக்குரிய இலக்கணத்தை ஒருவர் மிக எளிய நடையில் விளங்க வைக்கின்றார். தொண்டன் கொக்கைப்போலிருப்பான்; கோழிபோலிருப்பான்; உப்பைப்போலிருப்பான். கொக்கு நீர்வளமுள்ள இடத்தைத் தினமும் நாடுவது போலத் தொண்டனும் பக்திவளமுள்ள இடத்தை நாடுவான். கொக்கு சிறு மீன்களை எல்லாம் போகவிட்டுப் பெரிய மீனுக்காகக் காத்திருப்பது போல சிவதொண்டனும் தன்னை ஈடேற்றும் குருநாதனுடைய வரவை எதிர்பார்த்திருப்பான்—கோழி குப்பையைக் கிளறி உணவை எடுத்துக் குஞ்சுகளுக்குக் கொடுப்பதுபோல சிவதொண்டனும் பல நூல்களைப் படித்து அவற்றிலிருந்து மணியான கருத்துக்களை மன்னுயிருக்கு உணவாக வழங்கிக்கொண்டிருப்பான்—உப்பு தான் கரைந்து, உருவமழிந்து, தன்னைச் சேர்ந்த பொருளுக்கு ருசியைக் கொடுப்பதுபோல, தொண்டனும் தொண்டுக்குள் மறைந்து தன்னை வெளிக்காட்டிக்கொள்ளாமல் பிறர்க்குபகாரியாக வாழ்வான்—இத்தகைய இலட்சணம் உடையவர்களே சிவதொண்டர்கள். சிவதொண்டர்கள் எல்லா இடங்களிலும், எல்லாப் பொருட்களிலும், சிவனையே கண்டுகொண்டிருப்பார்கள். தன்னைக் கொல்ல வரும் புலியிலும் சிவத்தைக் காண்பவனே உண்மைத் தொண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டத்தில் பிண்டத்தில்
ஆண்டவனைக் காணும்-தொண்டர் நாங்களே
சிவ–தொண்டர் நாங்களே

என்பதும் யோகசுவாமிகள் வாக்காகும். மேலும், சுவாமிகள் தெளிவாகக் கூறுகின்றார்: சந்திரன் சிவதொண்டு ஆற்றுகின்றது. சூரியனும் ஏனைய கிரகங்களும் அத்திருப் பணியையே செய்கின்றன. அனைத்தும் சிவன் செயல், உலகில் எல்லாம் சிவதொண்டையே ஆற்றுகின்றன. சிவ தொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம்.

இவ்வண்ணமே, காரிய + ஆலயம்; வித்திய + ஆலயம், தேவ + ஆலயம், என்று யாம் கருமம் ஆற்றும் இடமெல்லாவற்றையும் ஆலயம் என வகுத்துக் கூறி, அங்கே நடப்பதெல்லாம், பூஜை, ஆராதனை, திருப்பணி அல்லது சிவதொண்டாகவே நடைபெற வேண்டுமென வழிகாட்டி வைத்தனர் எம் முன்னோர். தொண்டின் பெருமையை உலகுக்கு விளக்கவே புராணமொன்று திருத்தொண்டர் புராணம் எனப் பெயர்பெற்றது. சிவதொண்டினால் சீவ காருண்யமும், சிவபுண்ணியமும், சிவபக்தியும் ஓங்கும். ஆகாயமளாவ அடுக்கப்பெற்ற விறகு ஒரு சிறு நெருப்புப் பொறிபட்டு, ஒன்றுமில்லாது, இருந்த இடமே தெரியாது சாம்பராகுவதுபோல், எண்ணிறந்த பிறப்புக்களிலும் செய்து வந்த தீயவினைக் குவியல்கள் எல்லாம் ஒரு சிறிய தூயசிவ தொண்டினாலே அழிந்துவிடுகின்றன. சிவபெருமான் எங்குமுள்ளவனாதலாலே சிவதொண்டனுக்கு எல்லாரும் உறவினராவர்.

சாதிபேதம், சமயபேதம், பால்பேதம் எதுவுமே சிவதொண்டனிடம் இருக்கமாட்டாது. சிவதொண்டனுக்கு உள்ளத்திலே சிவத்தியானம், வாக்கிலே சிவநாமம், உடலிலே சிவதொண்டு பொலிந்து தோன்றும். இத்தகைய தொண்டனுடைய சீவன் சிவனாகின்றது. இருந்த இடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்தே சிவதொண்டன் உலகம் முழுவதையும் பார்க்கிறான். அவனும் சிவமயமாகி, உலகம் முழுவதும் அவனுக்கு சிவமயமாகவே இருக்கின்றது. சிவமயம் என்று நாம் முதல் எழுதும் தத்துவமும் இதுவே. இவற்றையே யோகசுவாமிகள் :

தொண்டர் நாங்களே—சிவ
தொண்டர் நாங்களே

மண்டு பிணியால் வருந்த மாட்டோம்
மாதாக் கருப்பையின் மீண்டுவாராத் (தொண்டர்)
பண்டுசெய் வினையெலாம் பறந்துபோச்சு
பாரிலனைத்தும் உறவேயாச்சு (தொண்டர்)
கொண்டுங் கொடுத்தும் குடிகுடியீசற்கு
என்றுமாளாகி எப்போதும் வாழும் (தொண்டர்)
வேதாந்த சித்தாந்தம் வேறாகக் காணும்
வீட்டு நெறியில் நாட்ட மிகவுள்ள (தொண்டர்)
சிவசிவ என்றெந்த வேளையுஞ் சொல்லி
சிவன் சிவனென்று சித்தத்திற் கொள்ளும் (தொண்டர்)
இருந்த இடத்தினில் எல்லாம் பார்ப்போம்
பொருந்திய வண்ணம் பூமியில் வாழும் (தொண்டர்)

வணக்கம் நமசிவாய.

★

மனிதனுடைய ஹிருதயத்தில் ஈசுவரன் தோற்றமடைவதின் அடையாளங்கள் யாவை? சூரியோதயத்தின் போது தோன்றும் பிரகாசம் சூரியனுடைய உதயத்தைத் தெரிவிக்கின்றது. அதுபோல ஈசுவரன் உள்ளத்தில் உதயமாவதற்கு முன்னால், சுயநலம் கருதாத்தன்மை, பரிசுத்தம், சன்மார்க்கம் ஆகிய குணங்கள் உண்டாகின்றன.

—ஸ்ரீ இராமக்கிருஷ்ணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவமயம்

'எங்கும் ஈசனைக் காணுதல் இன்பமே' என்பது ஸ்ரீ யோகசுவாமிகளுடைய வாக்கு. தவத்தின் முடிவு இக் காட்சியிலேயே பொருந்துகின்றது. உலகம் இறைவனுடைய படைப்பு. அவனுடைய படைப்பில் அவனைக் காண்பதுவே சிறந்த இன்பமாகும். கோயில் மூர்த்தியிலே இறைவனுடைய சாந்நித்தியம் விளங்குவதுண்டு. மிருகம், பறவை, புல், பூண்டு, மலை, ஆறு, கடலாகிய எல்லாவற்றிலும் இறைவன் பேரழகே பரிணமிக்கின்றது.

ஊனாய் உயிரானாய் உடலானாய் உலகானாய்
வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்
தேனார் பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
ஆனாயுனக் காளாயினி அல்லேனெனலாமே

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரமும் அழகிய சான்றாகும்.

இளம்பிறைச் சந்திரனைப் பார்த்த உடனே, சிவபிரானுடைய சிந்தனை உண்டாகின்றது. எருதைப் பார்த்த உடனே சிவ சிந்தனை வருகின்றது. மயிலையும் சேவலையும் பார்க்கும்போது முருகனுடைய நினைவு எழுகின்றது. சிங்கத்தைப் பார்த்ததும் சக்தியின் நினைவு உண்டாகின்றது. இப்படி ஒவ்வொரு பொருளையும் இறைவனோடு சேர்த்து எண்ணும் பழக்கம் உண்டாகிவிட்டால் இறைவனையே எல்லாப் பொருட்களிலும் கண்டு களிக்கலாம்.

சூரிய உதயத்திலும் அஸ்தமனத்திலும் எழுகின்ற வர்ணஜாலங்கள் இறைவனுடைய அழகே. கடலின் நீல நிறம் கண்ணனுடைய நிறமே. காட்டின் மலைச்சாரலின் பசிய நிறம் இறைவியினுடைய நிறமே. கனியின் ரசமும் இறைவனுடைய ரசமே. கோர யுத்தத்திலும், இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவிலும் இறைவனுடைய சீற்றமே காண்கின்றனர் மகான்கள். காக்கையிலும் ஒரு இன்ப அழகைக் கண்டார் பாரதியார்.

காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்
கரியநிறம் தோன்றுதடா நந்தலாலா

எமது இதயத் துடிப்பை யோகிகள் "ஓம்" என்று உணருகின்றனர். காற்று ஓம் என்று வீசுகின்றது. மழை ஓம் என்று வருஷிக்கின்றது. வெற்றுக் குடத்தைக் காதோடு வைத்துக் கேட்டால், ஓம் என்று கேட்கின்றது. இப்படியே அண்டங்களிலெல்லாம் ஓம் என்ற பிரணவ நாதமே ஒலித்துக்கொண்டு இருக்கின்றதென்பதை மன மடங்கிய யோக நிலையில் கேட்கலாகும். இப்படியே மாசற்ற யோகிகள் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளைக் காணுகிறார்கள். இந்தப் பரம பாக்கியத்தைப் பெற்றுவிட்டால் உலகில் பகை என்பதே இல்லாது; துன்பமும் இல்லாது

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

என்று முழங்கி, திருநாவுக்கரசைப்போல் தலைநிமிர்ந்து கூறலாகும்.

'நான் எனது' என்று அகங்கரித்து உரிமை பாராட்டும் பொருட்கள் எல்லாம் ஈசனுடைமை என்று முதல் முதல் அறிய வேண்டும். அனைத்தும் உடையவன் இறைவனே. அதனுற்றான் திருவாசகமும் தாயுமானுர் பாடல்களும் இறைவனை பன்முறை 'உடையாய்' என்று அழைக்கின்றன. இறைவன் இரண்டு இடங்களில் புன்சிரிப்புக் கொள்ளுகின்றுன். மனிதன் நான் என்று சொல்லும்போதும் எனது என்று இறுமாக்கும்போதும் இறைவனுக்கே புன் சிரிப்பு உண்டாகின்றது. பச்சிளம் பிள்ளைகள் 'என் வீடு, உன் வீடு' என்று மண்வீடு கட்டி இன்புறுவதுபோலல்லவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமும் ஏமாந்து மயக்கமுற்று அல்லற்படுகின்றோம்! எல்லாம் ஈசனுடைமை, எல்லாம் அவன் சொரூபம், என்ற எண்ணத்தை மறந்துவிடக்கூடாது. நாம் அனுபவிக்கும் பொருள் செல்வம் ஆகிய சகல வஸ்துக்களிலும் இறைவன் நிறைந்திருக்கின்றான். நாம் அணியும் ஆடை ஆபரணங்களிலும் அவன் இருக்கின்றான். இவ்வண்ணம் எமது பாவனையை முற்றாக மாற்றிக்கொள்ள வேண்டும். இப்படியாக எமது எண்ணங்கள் சிவ உணர்வுடன் மாறிக்கொண்டிருக்கும்போது, ''இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க'' என்ற மணிவாசகத்தை உணர முடிகிறது. இதயத்தில் அவன் திருப்பாதங்களைக் கண்டுகொண்டிருக்கலாம். யாவற்றிலும் இறைவன் நிறைந்துள்ளான் என்ற அறிவு உதயமாகிவிட்டால் ஆண்டவனுக்கு அரும்பணி ஆற்றாது இருக்க முடியாது.

தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே

என்ற அப்பர் மனோநிலை ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

வணக்கம் நமசிவாய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபதேசம்

மனிதர் பார்க்காமற் போனாலும், ஈசுவரன் பார்க்கிறான் என்று, தனியாக இருக்கும்போது எவனொருவன் ஒரு பாபத்தையும் செய்வதில்லையோ, அவன்தான் வாஸ்தவமான தர்மவானாவான். மனிதர் கண்ணுக்குப் புலப்படாமல் இருந்தாலும், ஈஸ்வர திருஷ்டிக்குட்படுவோம் என்ற பயத்தினால் எவனொருவன் காட்டில் தனியாக இருக்கும்போதும் ஒரு கட்டழகியின் வலைக்குள்படாமலும், காம எண்ணத்தால் அவளைக் கண்ணெடுத்துப் பாராமலும் இருக்கிறானோ அவன்தான் வாஸ்தவமான யோகி. ஒருவருமில்லாது தனித்துள்ள ஒரு வீட்டில் காணப்படும் பொன் முடிப்பை எவனொருவன் எடுத்துக் கொண்டு போக இச்சைப்படமாட்டானோ, அவனே தர்மவான். ஊரார் வசைமொழிக்குப் பயந்து வெளி வேஷத்துக்காக எவனொருவன் தர்மத்தை அனுஷ்டிக்கிறானோ அவனைத் தர்மவான் என்று சொல்லக்கூடாது. மௌனமாயும் மறைவாயும் அனுஷ்டிக்கும் தர்மமே வாஸ்தவமான தர்மம்.

—ஸ்ரீ இராமக்கிருஷ்ணர்.

✱

உலகில் தோன்றிய அவதாரங்களெல்லாம் ஒரே ஈசுவரனே. அவன் பிரம்மமாகிய சமுத்திரத்தில் அமிழ்ந்து ஓரிடத்தில் கிளம்பும் போது கிருஷ்ணன் எனவும், இன்னொரு தரம் மூழ்கி வேறிடத்தில் கிளம்பும் போது கிறிஸ்த்து எனவும் அழைக்கப்படுகின்றான்.

—ஸ்ரீ இராமக்கிருஷ்ணர்.

✱

இந்திரிய விஷயங்களின் மீதுள்ள பற்று எவ்வளவுக்குக் குறைந்து வருமோ, அவ்வளவுக்குக் கடவுளிடத்து பக்தி அதிகரித்து வரும்.

—ஸ்ரீ இராமக்கிருஷ்ணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தன்: என்போன்ற பாமரர்கள் உண்மையான ஞானிகளைக் கண்டுகொண்டு போலிகளிடம் ஏமார்ந்து போகாமல் உய்வதெப்படி?

ஸ்ரீ ரமண மஹரிஷி: ஒரு உண்மை ஞானியின் சந்நிதியில் ஒருவன் சற்று நேரம் அமர்ந்திருந்து பார்த்தால், அவன் மனம் அவனுடைய முயற்சியின்றியே அமைதிக் கடலில் ஆழ்வதை அவன் உணருவான். உண்மையுணர்ந்த உத்தமர்களைக் கண்டுணர இதுவே சிறந்த உபாயம்; வேறு வாதங்களில் இழிந்து அல்லற்படத் தேவையில்லை.''

★

மண் பெண் பொன்: இம் மூன்றையும் மறந்தாலும்—ஆடம்பரம் புகழை மறக்க முடியாது; அதையும் மறக்கலாம்—பசி நினைவு, பொய் மறக்க முடியாது. இதைச் சொல்லிக்கொண்டே சாகத்தான் போகிறோம்; ஆனால், நாம் செய்த உபகாரங்கள் சொற்பகாலம் சாகாமல் இருக்கும்.

—திருவலம் ஸ்ரீ சிவானந்த மௌன சுவாமிகள்.

★

நல்லாரைக் காப்பதற்கும், கெட்டவரைக் கரந்து ஒடுக்குதற்கும், தர்மத்தை நிலைநாட்டுதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்.

—பகவத்கீதை.

★

கேடு மிக உடையோனும், வேறு ஒன்றையும் எண்ணாது என்னைப் பஜிப்பானானால் அவனை சாது என்றே கருதப்படவேண்டும்......அவன் விரைவில் அறவான் ஆகிறான்; நித்திய சாந்தியையும் அடைகிறான். என் பக்தன் நாசமடைவதில்லை என்று நன்கு அறிவுறுத்துக.

—பகவத்கீதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨

உய்யும் படிக்கு உன் திருக்கருணை
ஒன்றைக் கொடுத்தால் உடையாய் பாழ்ம்
பொய்யும் அவாவும் அழுக்காறும்
புடை பட்டோடும் நன்னெறியாம்
மெய்யும் அறிவும் பெறு பேறும்
விளங்கும் எனக்குன் அடியார்பாற்
செய்யும் பணியும் கைகூடும்
சிந்தைத் துயரம் தீர்ந்திடுமே.

—தாயுமானவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மெய்கண்டான்"

| | | |
|---|---|---|
| 1. | திருக்குறட் கலண்டர் No. 1 ஸ்பெஷல் | 2 40 |
| 2. | திருக்குறட் கலண்டர் No. 1 *(சிவப்பு)* | 2–25 |
| 3. | ஆபிஸ் கலண்டர் *(தேதி பிளக் 5" × 7¼" அளவுள்ளது)* | 5–00 |
| 4. | நன்மொழிக் கலண்டர் No. 2 | 1–35 |
| 5. | மாதக் கலண்டர் *(பஞ்சாங்கக் கலண்டர்)* | –85 |
| 6. | சிங்கள கலண்டர் *(No. 1 கலண்டர் அளவுள்ளது)* | 2–15 |
| 7. | ரேபிள் கலண்டர் *(பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்)* | 5–50 |
| 8. | தரைப் படம் *(அழகிய பல மாதிரிகள்)* | 2–75 |
| 9. | No. 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி*(பிளாஸ்ரிக் கவருடன்)* | 2–75 |
| 10. | No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ,, | 2–20 |
| 11. | No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 3–60 |
| 12. | No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 2–20 |
| 13. | No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1–75 |
| 14. | No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி **'A'** *(பக்கம் 1 நாள்)* | 3–85 |
| 15. | No. 7 ,, ,, ,, **'B'** *(பக்கம் 2 நாள்)* | 3–30 |
| 16. | No. 8 அலுவலக (Official) டயறி *(பிளாஸ்ரிக் கவர்)* | 3–55 |
| 17. | ஜெம் பிளாஸ்ரிக் டயறி | 1–85 |
| 18. | புரொபெஷனல் பாக்கெட் டயறி (Appointments) | 3–30 |
| 19. | No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி (பேர்ஸ் சகிதம்-With Purse) | 3–15 |
| 20. | No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் **'B'** டயறி *(பக்கம் 2 நாள்)* | 4–40 |
| 21. | ஜெம் பேர்ஸ் டயறி | 2–75 |
| 22. | வலற் டயறி (Wallet Diary-*மிகச் சிறந்தது)* | 6–50 |
| 23. | பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 5–50 |
| 24. | பிளாஸ்ரிக் சிங்கள பாக்கெட் டயறி | 2–20 |
| 25. | சிங்கள பஞ்சாங்க **'A'** டயறி (Plastic) | 3–85 |
| 26. | ,, ,, **'B'** டயறி ,, | 3–30 |
| 27. | புரொபெஷனல் பிளாஸ்ரிக் (Appt.) டயரி 7¼" × 9¾" | 7–00 |
| 28. | புரொபெஷனல் பாக்கெட் பேர்ஸ் டயறி | 4–15 |

இன்னும் பல உண்டு. மற்றும் விபரங்களுக்கு

## மெய்கண்டான் அச்சியந்திரசாலை லிமிட்டெட்

*161, செட்டியார் தெரு, கொழும்பு-11.*

போன்: *79141*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WALLETS, DOCUMENTS CASES, ETC.

| CODE No. | DESCRIPTION | PRICE PER Dozen |
|---|---|---|
| DCA | Document Case Small with one pocket | 21-00 |
| DCB | Document Case Small with two pockets | 26-00 |
| DCC | Document Case Medium with two pockets | 30-00 |
| DCD | Document Case Large | 65-00 |
| TDC | Travel Document Case | 42-00 |
| WCL | Writing Case Large | 65-00 |
| TAPS | Telephone Appt. Pad Small | 26-00 |
| TAPL | Telephone App. Pad Large | 35-00 |
| WA | Wallet Model "A" | 16-00 |
| WB | Wallet Model "B" | 17-50 |
| WC | Wallet Model "C" | 20-00 |
| WD | Wallet Mdoel "D" (Zip) | 26-00 |
| WE | Wallet Model "E" | 24-50 |
| WF | Wallet Model "F" | 13-50 |
| WG 1 | Wallet Model "G 1" | 20-00 |
| WG 2 | Wallet Model "G 2" | 22-00 |
| WG 3 | Wallet Model "G 3" | 27-00 |
| WG 4 | Wallet Model "G 4" | 32-50 |
| WG 5 | Wallet Model "G 5" | 25-00 |
| WG 6 | Wallet Model "G 6" | 25-00 |
| WH | Wallet Model "H" | 26-00 |
| WKPD | Wallet "K" with Picture and Diary | 37-00 |
| KW | Key Wallet | 12-00 |
| DLC | Driving Licence Cover | 11-00 |
| KP | Key Purse | 19-00 |
| DC | Desk Calendar | 42-00 |
| TAC | Table Appt. Calendar | 66-00 |

Making Embossing Block 17/50 Each.

One Embossing or one Printing free of Charge.

Each Additional Embossing or Printing on each article at -/15 cents each.


## THE MEIHANDAN PRESS LTD.

161, SEA STREET, COLOMBO. Phone: 79141


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org